பொருளடக்கம்

✿

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 21

பகுதி 1: அறிமுகம் / 25

1 பாதுகாப்பு எனும் அருட்கொடை / 27

பகுதி 2: குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் வழிமுறைப்படி பாதுகாப்பை உறுதிப்படுத்துகிற வழிமுறைகள்

1 முதல் காரணம்: ஈமான் - அல்லாஹ்வின்மீதான சரியான நம்பிக்கை / 41

2 இரண்டாவது காரணம்: அல்லாஹ்விற்கு என்றே தூய மனதோடு காரியமாற்றுவதும் அவனை மட்டுமே வணங்குவதும் / 45

3 மூன்றாவது காரணம்: பிரார்த்தனை செய்வது / 49

4 நான்காவது காரணம்: குழப்பமான காலக்கட்டங்களில் நன்கு தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்களாக உள்ள மார்க்க அறிஞர்களிடம் செல்வது / 53

5 ஐந்தாவது காரணம்: முஸ்லிம்களின் மைய நீரோட்ட கூட்டமைப்பைச் சேர்ந்திருப்பதும் அதிகாரத்தில் இருப்பவர்களின் பேச்சைக் கேட்டு அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் / 57

6 ஆறாவது காரணம்: மக்கள் மத்தியில் மார்க்கக்கல்வியைப் பரப்புவதும் நபியின் வழிமுறையைக் கற்பிப்பதும் / 62

7 ஏழாவது காரணம்: ஈமானிய சகோதரத் தொடர்பு உறுதிப்படுவது / 63

8 எட்டாவது காரணம்: தீமைகளைத் தடுப்பது / 66

9 ஒன்பதாவது காரணம்: வரம்பு கடந்து நடப்பவர்களுக்குத் தண்டனைகளைச் செயல்படுத்துவதும் அநியாயக்காரர்களை அநியாயம் செய்ய விடாது தடுப்பதும் / 70

10 பத்தாவது காரணம்: அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவது / 72

முடிவுரை / 74

1

பாதுகாப்பு எனும் அருட்கொடை

✿

எல்லாப் புகழும் நன்றியும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவனை நாம் புகழ்வோம். அவனிடத்திலேயே உதவி தேடுவோம். அவனிடத்தில் பாவமன்னிப்புத் தேடி, தவ்பா செய்வோம். நம்முடைய ஆன்மாக்களின் தீங்குகளை விட்டும் நம்முடைய கெட்ட செயல்பாடுகளை விட்டும் அல்லாஹ்விடத்தில் பாதுகாப்புத் தேடுவோம். அல்லாஹ் யாருக்கு நேரிய வழியைக் காண்பிப்பானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. யாரை வழிதவறச் செய்வானோ அவருக்கு வழிகாட்டுபவர் யாருமில்லை. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய உண்மையான இரட்சகன் வேறு யாருமில்லை என்றும், அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யாருமில்லை என்றும் நான் சான்று பகர்கிறேன். மேலும், திட்டமாக முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வுடைய அடியாராகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்றும் நான் சான்று பகர்கிறேன். நபி ﷺ அவர்களின்மீதும் அவருடைய குடும்பத்தார் மற்றும் தோழர்கள் அனைவரின்மீதும் அல்லாஹ் அதிகமாக சாந்தியும் ஈடேற்றமும் அளிப்பானாக.

அல்லாஹ்வின்மீதான புகழ்ச்சிக்கும் நபியவர்களின்மீதான ஸலவாத்துக்கும் பின்பு: பாதுகாப்பு குறித்த தலைப்பு உள்ளங்களுக்கு விருப்பமான தலைப்பாகும். பல்வேறு உட்பிரிவுகள் கொண்ட தலைப்பும் ஆகும். இதுகுறித்து மிக முக்கியமாகப் பேச வேண்டும். ஆகவே, நாம் பேசாமல் இருக்க முடியுமா என்ன?

பாதுகாப்பு – அனைவருக்கும் முக்கியம்

பாதுகாப்பு என்பது மிக முக்கியமான நோக்கமாகும். மக்கள் அனைவரும் பாதுகாப்பை நோக்கி விரைகின்றனர். சொற்ப

1

முதல் காரணம்:
ஈமான் – அல்லாஹ்வின்மீதான சரியான நம்பிக்கை

✿

ஈமான்தான் பாதுகாப்பின் அடிப்படையாகும். அதுவே பெரிய காரணம் ஆகும். அதைக்கொண்டுதான் பாதுகாப்பு கிடைக்கும். மட்டுமன்றி, ஈமான் என்ற வார்த்தை அகராதிப்படி பாதுகாப்பு என்ற அர்த்தத்தைக் கொடுக்கிற அம்ன் என்ற பதத்தில் இருந்துதான் பிளந்து எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு என்பது அச்சம் என்பதற்கு எதிர்ப்பதம் ஆகும். ஈமான் என்றால் பாதுகாப்பாகும்; நிம்மதியாகும்; அல்லாஹ்வை நம்பிக்கைகொள்வதாகும். ஓர் அடியானுக்கு ஈமான் அதிகப் படும் போதெல்லாம் பாதுகாப்பும் அதிகப்படும். அல்லாஹ் கூறுகிறான்:

فَمَنْ آمَنَ وَأَصْلَحَ فَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

ஆகவே, எவர்கள் உண்மையாகவே அல்லாஹ்வை நம் பிக்கை கொண்டு, (தங்களைச்) சீர்திருத்திக்கொண்டார்களோ அவர்களுக்கு எந்தப் பயமுமில்லை; அவர்கள் கவலைப் படவும்மாட்டார்கள். (குர்ஆன் 6:48)

கவலையும் அச்சமும் இல்லாது போய்விட்டால் பரிபூரணமான பாதுகாப்பும் நற்பாக்கியமும் நிரந்தரமான வெற்றியும் கிடைத்து விடும். மேலும் அல்லாஹ் கூறுகிறான்:

الَّذِينَ آمَنُوا وَلَمْ يَلْبِسُوا إِيمَانَهُمْ بِظُلْمٍ أُولَئِكَ لَهُمُ الْأَمْنُ وَهُمْ مُهْتَدُونَ

எவர்கள் அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டு, தங்களின் (அந்த) நம்பிக்கையுடன் (இணைவைத்து வணங்குதல் என்னும்) அநியாயத்தையும் கலந்துவிடவில்லையோ

4

நான்காவது காரணம்: குழப்பமான காலக்கட்டங்களில் நன்கு தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்களாக உள்ள மார்க்க அறிஞர்களிடம் செல்வது

✿

குழப்பமான சூழல்களிலும் மக்களுக்குப் பாதுகாப்புத் தேவைப்படுகின்ற நேரங்களிலும் நன்கு தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்களாக உள்ள, அல்லாஹ்வுடைய மார்க்கத்தைப் பற்றி ஆதாரத்தோடு பேசக்கூடிய, ஆராய்ந்து முடிவெடுக்கிற மார்க்க அறிஞர்களிடம் செல்ல வேண்டும். எல்லா நபர்களிடமும் சென்றுவிடக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்:

وَإِذَا جَاءَهُمْ أَمْرٌ مِنَ الْأَمْنِ أَوِ الْخَوْفِ أَذَاعُوا بِهِ وَلَوْ رَدُّوهُ إِلَى الرَّسُولِ وَإِلَى أُولِي الْأَمْرِ مِنْهُمْ لَعَلِمَهُ الَّذِينَ يَسْتَنْبِطُونَهُ مِنْهُمْ

(பொது மக்கள்) பாதுகாப்பையோ அச்சத்தையோ பற்றிய ஏதேனும் ஒரு செய்தி அவர்களுக்கு எட்டினால் (உடனே) அதனைப் பரப்ப ஆரம்பித்துவிடுகின்றார்கள். (அவ்வாறு செய்யாமல்) அதனை அல்லாஹ்வின் தூதரிடமும், தங்களில் உள்ள அதிகாரிக(ளான மார்க்க அறிஞர்க)ளிடமும் (மட்டும்) தெரிவித்தால் அதுகுறித்து ஆராய்ந்து முடிவெடுக்கக்கூடிய அவர்கள் உண்மையை நன்கறிந்து (தக்க நடவடிக்கைகளை எடுத்துக்)கொள்வார்கள். (குர்ஆன் 4:83)

இந்த வசனத்தை நீ சிந்தித்துப் பார். சமூகத்தின் பாதுகாப்புத் தேவைப்படுகிற சூழல் இருந்தாலும் அச்சமான சூழல் இருந்தாலும் மக்கள் அனைவரிடத்திலும் சென்று அதைப் பற்றி மூறையிடக் கூடாது என்று இந்த வசனத்தில் கற்பித்து தரப்படுகிறது. மக்கள் அனைவரிடத்திலும் சென்று மார்க்கத் தீர்ப்பு

5

ஐந்தாவது காரணம்: முஸ்லிம்களின் மைய நீரோட்ட கூட்டமைப்பைச் சேர்ந்திருப்பதும் அதிகாரத்தில் இருப்பவர்களின் பேச்சைக் கேட்டு அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும்

✿

ஏனென்றால், ஆட்சி அதிகாரத்தைக்கொண்டுதான் பாதுகாப்பு என்பது ஏற்படும். ஆட்சியில் இருப்பவர்களின் சொல் கேட்டு கட்டுப்பட்டு நடந்தால்தான் ஆட்சி நிலைக்கும். ஆட்சியில் இருப்பவர்களின் பேச்சைக் கேட்காமலும் அவர்களுக்குக் கட்டுப்படாமலும் அவர்கள் விசயத்தில் அல்லாஹ்வுடைய ஏவல்களையும் அவனுடைய தூதருடைய ஏவல்களையும் ஏற்று நடக்காதவராக இருந்தால் மக்களுக்கு மத்தியில் குழப் பங்களும் பிரச்சினைகளும் தீர்வுகளும் கலகங்களும் பரவ ஆரம்பிக்கும். ஆகவேதான், ஆட்சி அதிகாரத்தில் இருப் பவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு நலம் நாட வேண்டும் என்றும், அவர்களுடைய சொற்களைக் கேட்டு அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் குர்ஆனிலும் ஸுன்னாவிலும் நிறைய ஆதாரங்கள் வந்துள்ளன. மேலும், அவர்களின் மூலமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளின்போது பொறுமை காக்க வேண்டும் என்றும் குர்ஆனிலும் ஸுன்னாவிலும் வலி யுறுத்தப்பட்டுள்ளது. மனிதன் பொறுமையோடு இருந்து அல்லாஹ் நிலைமைகளைச் சீர்படுத்த வேண்டும் என்று பிரார்த்தித்து ஆட்சியாளர்களுக்கு நேர்வழியையும் நல் உதவி யையும் அல்லாஹ் அருள வேண்டும் என்று கேட்க வேண்டும்.

6

ஆறாவது காரணம்: மக்கள் மத்தியில் மார்க்கக்கல்வியைப் பரப்புவதும் நபியின் வழிமுறையைக் கற்பிப்பதும்

✿

மக்களுக்கு நன்மையை ஏவி தீமையைத் தடுக்க வேண்டும். ஏனென்றால், இஸ்லாமியக் கல்வியறிவும் நன்மைகளும் நேர்வழியும் மக்களிடத்தில் பரவிவிட்டால் பாதுகாப்பும் உறுதிப்பட்டுவிடும். இதுவே மார்க்க அழைப்புப்பணி செய்பவர்கள், பிரச்சாரர்கள், மதரஸாக்களில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்கள், ஆசிரியைகள் போன்றோருக்கு அவசியமான நோக்கமாகும். இவர்கள் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறும் அவனை அஞ்சி நடக்குமாறும் ஏவல்களை கடைப்பிடிக்குமாறும் விலக்கல்களை தவிர்ந்துகொள்ளுமாறும் நன்மையான காரியங்களில் முந்தி செயல்படுமாறும் மக்களை வலியுறுத்துவார்கள். ஏனென்றால், இந்த அழகான கருத்துகளும் வணக்கவழிபாடுகளும் மக்களுக்கு மத்தியில் நன்மையைப் பரப்புவதும் அவர்களுடைய பாதுகாப்பையும் நற்பாக்கியத்தையும் உறுதிப்படுத்தும். தீங்குகளிலிருந்தும் இடையூறுகளிலிருந்தும் ஆபத்துகளிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் மக்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

மார்க்க அறிவு குறைந்துவிட்டால் தவிர எந்தச் சபையிலும் பாதுகாப்புக்கு இடையூறான விசயங்கள் ஏற்படாது. சரியான மார்க்க அறிவு மக்களிடத்திலே பரவிவிட்டால் அவர்களுடைய காரியங்களும் சரிப்பட்டுவிடும். அவர்களின் நிலைமைகளும் உறுதியான முறையில் அமைந்துவிடும். அவர்களுடைய பாதுகாப்பு உறுதிப்பட்டு அவர்களுடைய நற்பாக்கியம் முழுமை பெற்றுவிடும்.

8

எட்டாவது காரணம்: தீமைகளைத் தடுப்பது

✿

முஸ்லிம்களின் மைய நீரோட்ட கூட்டமைப்பில் இருக்கின்ற ஒவ்வொரு முஸ்லிம் தனி நபர்களும் தீமைகளைத் தடுக்க வேண்டும். இது தமக்கும் தாம் சார்ந்திருக்கிற முஸ்லிம் களின் கூட்டமைப்புக்கும் பாதுகாப்பாக அமையும். இதைக் கொண்டே இஸ்லாம் வந்தது. இதன் பக்கமே அழைப்பு விடுக்கிறது. தீமைகளை தடுத்தால் மகத்தான நற்கூலி இருப் பதாகவும், எண்ணிலடங்கா சிறப்புகள் இருப்பதாகவும் மார்க் கம் வரிசைப்படுத்துகிறது. நபி ﷺ அவர்கள் தம்முடைய ஜும்ஆ சொற்பொழிவின்போது

وَنَعُوذُ بِاللَّهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَسَيِّئَاتِ أَعْمَالِنَا

'நம்முடைய ஆன்மாக்களின் தீங்குகளை விட்டும் நம்முடைய கெட்ட செயல்பாடுகளை விட்டும் அல்லாஹ்விடத்தில் பாதுகாப்புத் தேடுவோம்' என்று கூறிவந்தார்கள். (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ, ஸுனனுத் திர்மிதீ 1105)

மேலும், நபி ﷺ அவர்கள் பல நபிமொழிகளில் ஆன்மாவின் தீங்கை விட்டும் பாதுகாப்புத் தேடுமாறு வழி காண்பித் துள்ளார்கள். இந்த ஹதீஸை கவனியுங்கள்.

اللَّهُمَّ فَاطِرَ السَّمَوَاتِ وَالْأَرْضِ، عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ، رَبَّ كُلِّ شَيْءٍ وَمَلِيكَهُ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا أَنْتَ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِي، وَشَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ وَأَنْ أَقْتَرِفَ عَلَى نَفْسِي سُوءًا أَوْ أَجُرَّهُ إِلَى مُسْلِمٍ

'அல்லாஹும்ம ஃபாதிரஸ்ஸமாவாதி வல்அர்ளி ஆலிமல் ஙைபி வஷ்ஷஹாததி ரப்ப குல்லி ஷைஇன் வமலீகஹு அஷ்ஹது அன்லா இலாஹ இல்லா அன்த அஊது பிக்க

10

பத்தாவது காரணம்: அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவது

✿

அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்குச் செய்துள்ள அருட் கொடைகள் எண்ணிலடங்காதவை. அவனுடைய அருட் கொடைகளில் ஒன்றுதான் ஈமான்தாரிகள் பாதுகாப்போடு வாழுகின்ற சூழலாகும்.

ஈமான் கொண்டவர்கள் ஈமான் என்ற அருட்கொடையையும் பாதுகாப்பு என்ற அருட்கொடையையும் அல்லாஹ் வழங்கிய தற்காக அவனுக்கு அவர்கள் நன்றி செலுத்த வேண்டும். மேலும், இஸ்லாமையும் ஈடேற்றத்தையும் அல்லாஹ் வழங்கி யதற்காக நன்றி செலுத்துவதும் அவனுடைய அருட்கொடை களுக்காக வேண்டி அவனுக்கு நன்றி செலுத்தக்கூடியவர் களாகவும் அவனைப் புகழகூடியவர்களாகவும் இருப்பதும் கட்டாயக் கடமையாகும்.

அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடைகள் விசயத்தில் இறைமறுப்பை வெளிப்படுத்துபவர்களாக மக்கள் மாறி அவனுடைய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தாவிட்டால், அவன் வழங்கிய பாதுகாப்பானது பயம் நிறைந்த சூழலாக மாறிவிடும். அவர்களுடைய நிம்மதி கலக்கமாகவும் திடுக்க மாகவும் மாறிவிடும். அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தப் பட்டால் அது நிலைத்திருக்கும். நன்றி கெட்டத்தனமாக நடந்துகொண்டால் அந்த அருட்கொடைகள் அவனை விட்டு விரண்டோடிவிடும். அல்லாஹ் கூறுகிறான்:

وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ وَلَئِنْ كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ